சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 76/2021

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 09.09.2024

Pw1 (தங்கராஜ்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் கருமாண்டிசெல்லிபாளையம் கிராமத்தில் உள்ளது. பெருந்துறை டு குன்னத்தூர் செல்லும் கிழமேல் ரோட்டின் வட புறம் உள்ளதா என்றால் ஆமாம். அந்த சொத்து சாலையை ஒட்டி உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளம் என்ற இரு தளங்கள் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் கிழ புறத்த்தில் வடக்கு நோக்கி ஒரு பாதை உள்ளது என்றால் சரி. இந்த வழக்கின் பிரதிவாதி என் அண்ணன் என்றால் சரி. என் அம்மா பெயர் வள்ளியம்மாள் என்றால் சரி. என் அம்மா எந்த வருடம் இறந்தார் என்றால் 2020 ம் ஆண்டு இறந்தார். தாவா சொத்தை ஒட்டி கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரி. தாவா சொத்து பெருந்துறை டவுனில் பிரதான இடத்தில் உள்ளது என்றால் சரி. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 2-1/2 சென்ட். தாவா சொத்தின் புதிய மற்றும் பழைய சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் நம்பர் தெரியவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பு பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். வழக்கு சொத்து எத்தனை அயிட்டங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 3 அயிட்டங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. நான் வழக்கில் சொல்லியுள்ள சீனு (எ) மோகனசுந்தரம் என் சகலை என்றால் ஆமாம். நானும் அவரும் சேர்ந்து வியாபாரம் செய்து

வருகிறோம் என்றால் ஆமாம். இந்த வழக்கு வழக்கு மூலம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 9.9.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS